


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.06.2025) சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வெள்ளிவிழா கூடரங்கில், சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியின் 2025 ஆம் ஆண்டு மருத்துவ மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, மருத்துவ மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை வழங்கி விழா பேருரையாற்றினார்கள். இவ்விழாவில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் மரு. நாராயணசாமி, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.லியோ டேவிட், சென்னை கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் மரு.செந்தில்குமாரி, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.பாஸ்கர், இராயப்பேட்டை அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.ஆயிஷா ஷாஹீன், நிலைய மருத்துவ அலுவலர் மரு.வாணி மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மருத்துவ மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் துரைராஜ் மகள் திருமண விழாவில் திமுக கொள்கை பரப்பு செயலாளர் மற்றும் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் டாக்டர் எஸ் ஜெகத்ரட்சகன் எம்பி திமுக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கூல் பிரகாஷ், மாவட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் திரவியம் எம் சி மற்றும் பலர் வாழ்த்தினர்.



## க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்,

# கலைஞர் 102வது பிறந்த நாள் பொதுக்கூட்டம்: 4102 நபர்களுக்கு நல உதவிகள்!

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – ஆர். காந்தி சிறப்புரை!

### க.செல்வம், எம்.பி.– சன்பிராண்ட் கே.ஆறுமுகம் – மேயர் மகாலட்சுமி யுவராஜ் பங்கேற்பு!

சென்னை, ஜுன் 20 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, தி.மு.கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், சி.வி. எம்.பி.எழிலரசன் எம். எல்.ஏ. ஏற்பாட்டில் "மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 4102 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா" இன்று ( 20.06.2025 வெள்ளிக்கிழமை) மாலை 05.00 மணிக்கு, காஞ்சிபுரம், பிள்ளையார்பாளையம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பூங்கா அருகில் நடைபெற உள்ளது.

நிகழ்விற்கு, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர், எம். எல்.ஏ., தலைமை வகிக்க, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் வரவேற்புரையாற்ற உள்ளார்.

காஞ்சிபுரம் மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், 1வது பகுதி செயலாளர் கே. திலகர், 2வது பகுதி செயலாளர் எஸ்.சந்துரு, 3வது பகுதி செயலாளர் அ. தசரதன், வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எம்.பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்வில், 3500 கழக தோழர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விழா பேருரையாற்ற உள்ளார். 100க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கி உழவர் நலன் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் சிறப்புரையாற்ற உள்ளார். மகளிருக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி சிறப்புரையாற்ற உள்ளார். சிறுவேடல் க. செல்வம், எம்.பி., மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஜெ. ராமகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்வில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

நிகழ்வில், மாநகர நிர்வாகிகள் கே.ஏ. செங்குட்டுவன், ஏ.எஸ். முத்துச்செல்வம், வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன், கழக செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ். சிகாமணி, கழக தொண்டர் அணி தலைவர் ஜி. சுகுமாரன், கழக நெசவாளர் அணி செயலாளர் டி.அன்புமலன், கழக வர்த்தகர் அணி துணை செயலாளர்கள் பி. சந்திரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ், காஞ்சிபுரம் ஒன்றியக்குழு தலைவர் மலர்க்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழு தலைவர் ஆர். கே.தேவேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் நித்யா சுகுமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ராஜலட்சுமி குஜராத், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் சசிகலா கணேஷ், சாந்தி சீனிவாசன், எஸ்.மோகன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், சார்பு அணிகளின் மாநகர, பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2), தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் (BLC) உள்ளிட்ட பல்லாயிரகணக்கானோர் பங்கேற்கின்றனர்.

4வது பகுதி செயலாளர் சு. வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 120 வது நாள்!

### துறைமுகம் தொகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜுன் 20 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 120 ஆம் நாளான

கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (19.6.2025) 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 56 சண்முகராயன் தெரு, தையப்பன் தெரு சந்திப்பு. 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54 தங்க சாலை அரசு அச்சகம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, P. விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல். சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன் , K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டம் புது பெருங்களத்தூர் கிராமத்தில் கலைஞர் முதல்வராக இருந்தபோது 1969 ஆம் ஆண்டு வருவாய் வாரிய கூட்டுறவு வீட்டுமனை சங்கத்தில் தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் தேபேதார், ஓட்டுநர்கள் மற்றும் தலைமை தனக்காயர் அலுவலக சங்கத்திற்கு 19.6 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டது. கூட்டுறவு வீட்டுமனை சங்கத்தின் நிலம் வருவாய் வாரிய வீட்டுமனை பெற்ற 131 நபர்கள் 30 நபர்களுக்கு தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற உங்களைத் தேடி உங்கள் ஊரில் என்ற முகாமில் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கினார். இந்த முகாமில் மேயர் க. வசந்தகுமாரி, தாம்பரம் கோட்டாட்சியர், உணவு வழங்கல் துறை துணை ஆட்சியர், தாம்பரம் வட்டாட்சியர், ஜெபதுரை, ஓய்வு பெற்ற வட்டாட்சியர் பன்னீர்செல்வம்,குமாரசாமி மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர் .

## தமிழ்நாடு மாம்பழ விவசாயிகளைப் பாதுகாப்பீர்!

# அரசியலமைப்பின் 301-வது பிரிவை நிலைநாட்ட உடனே தலையிட வேண்டும்!

### ஒன்றிய அரசுக்கு டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜுன் 20 -

வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், ஒன்றிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பெரும் நெருக்கடியில் உள்ளனர். வேலூரில் மட்டும் 5,710 ஹெக்டேர் நிலத்தில் ஆண்டுக்கு 46,000 டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இப்போது 40,000 டன் மாம்பழம் விற்கப்படாமல் வீணாகி, விவசாயிகள் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நெருக்கடிக்கு முக்கிய காரணம், ஆந்திரப் பிரதேச அரசு, சித்தூர் மாவட்டத்தில் உள்ள பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாட்டு மாம்பழங்களை வாங்கத் தடை விதித்தது. இது இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை மீறும் செயல். இந்தப் பிரிவு, இந்தியா முழுவதும் வணிகம், வர்த்தகம், தொடர்பு ஆகியவற்றை சுதந்திரமாக நடத்த உரிமை அளிக்கிறது. ஆந்திர அரசின் இந்த அநீதியான முடிவு, விவசாயிகளின் வாழ்வை அழிப்பது மட்டுமல்ல, இந்தியாவின் பொருளாதார ஒற்றுமையையும் பாதிக்கிறது.

ஒன்றிய அரசு இந்தப் பிரச்சினையில் மௌனமாக இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது. தமிழ்நாட்டு விவசாயிகளை இந்த நெருக்கடியிலிருந்து காப்பாற்றவும், அரசியலமைப்பை நிலைநாட்டவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பிரச்சினையின் விவரங்கள்**

கடந்த 25 ஆண்டுகளாக, வேலூரைச் சேர்ந்த விவசாயிகள் 42,000 டன் மாம்பழங்களை சித்தூரில் உள்ள 34 பழச்சாறு தொழிற்சாலைகளுக்கு விற்று வந்தனர். சித்தூர் வெறும் 30 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆனால், ஆந்திர அரசு தமிழ்நாட்டு மாம்பழங்களை தடை செய்து, ஆந்திர விவசாயிகளுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கிறது.

ஆந்திர அரசு ஒரு கிலோ மாம்பழத்திற்கு 4 ரூபாய் மானியமும், தொட்டாபுரி மாம்பழத்திற்கு குறைந்த பட்ச விலையாக 12 ரூபாய் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டு மாம்பழங்கள் எல்லையில் நிராகரிக்கப்படுகின்றன. இதனால், வேலூரில் மாம்பழங்கள் விற்கப்படாமல் குவிந்து, விலை குறைந்து விட்டது. திருப்பத்தூர், கிருஷ்ணகிரி போன்ற இடங்களுக்கு மாம்பழங்களை எடுத்துச் செல்ல ஒரு டன்னுக்கு 1,2001,500 ரூபாய் செலவாகிறது. அங்கு ஒரு கிலோவுக்கு 5 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது. வேலூரில் பழச்சாறு தொழிற்சாலைகள் இல்லாததும், பழைய கூட்டுறவு பழச்சாறு தொழிற்சாலை மூடப்பட்டதும் விவசாயிகளை மேலும் பாதிக்கிறது. இதனால், அவர்களின் உழைப்பு வீணாகி, குடும்பங்கள் நிர்க்கதியாக உள்ளன.

301வது பிரிவு மீறலும், ஆந்திர அரசை கண்டித்தல்

ஆந்திரப் பிரதேச அரசின் இந்த முடிவு, இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை மீறுவதாகும். இந்தப் பிரிவு, இந்தியா முழுவதும் மாநிலங்களுக்கு இடையேயும், மாநிலத்திற்குள்ளும் வணிகம், வர்த்தகம் சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்று உறுதி அளிக்கிறது. இது இந்தியாவின் பொருளாதார ஒற்றுமையை உறுதி செய்யும் முக்கிய பிரிவு. ஆனால், ஆந்திர அரசு, தமிழ்நாட்டு மாம்பழங்களை சித்தூர் தொழிற்சாலைகளுக்கு தடை செய்து, அரசியலமைப்பை மீறியுள்ளது. எல்லையில் விவசாயிகளின் விவரங்களை சோதித்து, ஆந்திர விவசாயிகளுக்கு மட்டும் அனுமதி அளிப்பது, தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு எதிரான பாகுபாடு.

இது விவசாயிகளின் வாழ்வை அழிப்பது மட்டுமல்ல, இந்தியாவின் ஒற்றுமையையும், மாநிலங்களுக்கு இடையேயான நல்லுறவையும் பாதிக்கிறது. 25 ஆண்டுகளாக தமிழ்நாட்டு விவசாயிகள் சித்தூர் தொழிற்சாலைகளுக்கு மாம்பழம் வழங்கி, இரு மாநிலங்களின் பொருளாதாரத்திற்கும் பங்களித்து வந்தனர். ஆனால், ஆந்திர அரசு, சுயநலத்திற்காக இந்த உறவை அழித்து விட்டது.

ஒன்றிய அரசின் மௌனம் மிகவும் ஏமாற்றமளிக்கிறது. இந்திய அரசியலமைப்பின் 301வது பிரிவை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு மத்திய வேளாண்மை அமைச்சகத்திற்கு உள்ளது. ஆனால், ஆந்திர அரசின் தவறான முடிவை எதிர்க்காமல், தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்காமல், ஒன்றிய அரசு மௌனமாக உள்ளது. இது 'விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்', 'ஆத்மநிர்பர் பாரத்', 'பிரதான் மந்திரி பயிர் காப்பீடு திட்டம்' போன்ற வாக்குறுதிகளுக்கு எதிரானது.



தமிழ்நாடு அரசையும் வேலூர் மாவட்ட நிர்வாகத்தையும் பாராட்டுதல்

ஆந்திர அரசின் அநீதியையும், ஒன்றிய அரசின் மௌனத்தையும் எதிர்கொண்டு, தமிழ்நாடு அரசு, முதலமைச்சரின் அற்புதமான தலைமையில், விவசாயிகளுக்கு ஆதரவாக தனித்து நிற்கிறது. தமிழ்நாடு அரசு, விவசாயிகளின் நலனை முதன்மையாகக் கருதி, பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

வேலூர் மாவட்டத்திலிருந்து ஒரு உயர்மட்டக் குழு சித்தூருக்கு அனுப்பப்பட்டது. இந்தக் குழுவில் வேளாண்மை துணை இயக்குநர், வேளாண்மை அதிகாரிகள், தோட்டக்கலை அதிகாரி, துணை தாசில்தார், ஆர்.டி.ஓ. அதிகாரி ஆகியோர் இருந்தனர். இவர்கள் சித்தூர் மாவட்ட அதிகாரிகள் மற்றும் பழச்சாறு தொழிற்சாலைகளுடன் பேசி, முழு விவரங்களை அறிக்கையாக அளித்தனர். இந்த அறிக்கை, பிரச்சினையை மாநில மற்றும் ஒன்றிய அரசுக்கு எடுத்துச் செல்ல உதவியது.

ஒன்றிய அரசு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள்

தமிழ்நாடு அரசின் முயற்சிகளை ஆதரிக்கவும், 301வது பிரிவை நிலைநாட்டவும், ஒன்றிய அரசு உடனடியாக பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

1. மாநிலங்களுக்கு இடையே பேச்சுவார்த்தை: தமிழ்நாடு மற்றும் ஆந்திர முதலமைச்சர்கள், வேளாண்மை அமைச்சர்களுடன் உடனடி கூட்டம் நடத்தி, தமிழ்நாட்டு மாம்பழங்களுக்கு சித்தூர் தொழிற்சாலைகளில் 1421 நாட்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இது 301வது பிரிவின் சுதந்திர வர்த்தக உரிமையை உறுதி செய்யும்.

2. நிதி உதவி: ஒரு கிலோ மாம்பழத்திற்கு 4 ரூபாய் மானியம், ஒரு விவசாயிக்கு 5,000 ரூபாய் நிவாரணம், மற்றும் போக்குவரத்து செலவுக்கு மானியம் வழங்க வேண்டும். இவை 10 நாட்களுக்குள் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

3. சந்தை ஆதரவு: NAFED மற்றும் APEDA மூலம் ஒரு கிலோ மாம்பழத்திற்கு 12 ரூபாய் குறைந்தபட்ச விலையில் மாம்பழங்களை வாங்க வேண்டும். வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூரில் தற்காலிக வாங்குதல் மையங்கள் அமைக்க வேண்டும்.

4. உள்கட்டமைப்பு மேம்பாடு: வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரியில் பழச்சாறு தொழிற்சாலைகள், குளிர்பதன கிடங்குகள் அமைக்க 500 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். கூட்டுறவு பழச்சாறு தொழிற்சாலைகளை மீண்டும் தொடங்க வேண்டும்.

5. தேசிய வர்த்தகக் கொள்கை: 301வது பிரிவை அடிப்படையாகக் கொண்டு, மாநிலங்களுக்கு இடையே விவசாய வர்த்தகத்தை ஒழுங்குபடுத்த ஒரு தேசிய கொள்கையை உருவாக்க வேண்டும். பாகுபாட்டைத் தடுக்க ஒரு நிரந்தர ஆணையம் அமைக்க வேண்டும்.

6.நலத் திட்டங்களில் சேர்க்கை: மாம்பழங்களை மதிய உணவுத் திட்டம், ICDS போன்ற திட்டங்களில் சேர்க்க வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு மாம்பழம் வழங்குவதை ஊக்குவிக்க வேண்டும்.

7. ஏற்றுமதி ஊக்குவிப்பு: தமிழ்நாட்டு மாம்பழங்களை ஆத்மநிர்பர் பாரத், மேக் இன் இந்தியா திட்டங்கள் மூலம் உலக சந்தையில் பிரபலப்படுத்த வேண்டும்.

8.விவசாயிகளுக்கு ஆதரவு: அறுவடை முறைகள், சந்தை விவரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். புகார்களுக்கு ஒரு இலவச தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்த வேண்டும்.

இந்தப் பிரச்சினையில் உங்கள் தனிப்பட்ட கவனத்தையும், உடனடி நடவடிக்கையையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# 120வது வட்டக் கழக நிர்வாகிகள் பாக முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம்!

சென்னை, ஜுன், 20 -

சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு அறிவுறுத்தல்படி, திருவல்லிக்கேணி பகுதி கழக செயலாளர் ARP.M.காமராஜ். அவர்களின் வழிகாட்டுதல்படி, வட்ட அவைத் தலைவர் R.முனுசாமி தலைமையில், வட்டக் கழக செயலாளர் ICF.M.சங்கர் முன்னிலையில்

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி, 120வது வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து பாக முகவர்களுடன் (BLA2) நேற்று 19.06.2025 புதிய உறுப்பினர் சேர்க்கை குறித்தும், எதிர் வரும் 2026 சட்டமன்ற தேர்தல் முன்னிட்டும் அவசர ஆலோசனை கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அனைத்து வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து பாக முகவர்கள் (BLA2), பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.




பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கி, நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் பகுதி கழக செயலாளர், மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் வட்ட கழக செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன், கல்யாணி டில்லி எம்.சி. வரவேற்புரையில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன், உமாசங்கர்,பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந்தன்,இரா.கந்தவேலு, என். கே.ரவிச்சந்தின், சு.மனோகரன்,ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைக் கழக சொற்பொழிவாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி,கழக இளம் பேச்சாளர் ரிஷி சந்தோஷ் , இ.கருணாநிதி எம். எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது மகிழ் சிறப்புரையாற்றினர். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.